**S.C.No. 17/2021 நாள்: 22.08.2025**

**P.W.4 – அஸ்வினி**

**M.P.1351/2025 ல் 07.08.2025 அன்று பிறந்த உத்தரவின்பேரில் சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**(குற்ற இறுதியறிக்கையில் உள்ள வரிசைப்படி எதிரிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளனர். 1ம் எதிரி கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், 2ம் எதிரி துரைப்பாண்டி (எ) பாண்டி, 4ம் எதிரி மணிகண்டன் (எ) R.S.மணி, 5ம் எதிரி ரமேஷ் (எ) காவியாரமேஷ், 8ம் எதிரி தமிழரசன், 9ம் எதிரி அஜீத்குமார், 10ம் எதிரி செந்தில் (எ) செந்தில்ஈஸ்வரன், 11ம் எதிரி கலைச்செல்வன், 12ம் எதிரி விமல் பஷீர் ஆகியோர் முன்னிலையாகியுள்ளனர்.**

**1ஆம் எதிரி, 2 ஆம் எதிரி, 4 ஆம் எதிரி, 12 ஆம் எதிரி ஆஜர்படுத்தப்பட்டனர். 5 முதல் 11 எதிரிகள் ஆஜர்.**

**5 ஆம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

சம்பவத்தன்று நான் கல்லூரி செல்வதற்காகவும் செலவிற்கு பணம் வாங்குவதற்காகவும் என் அக்கா அ.சா.1 சஸ்மிதாவிடம் கேட்க சென்றிருந்தேன். கல்லூரியில் செலவு செய்வதற்காகத்தான் பணம் கேட்க சென்றிருந்தேன். நான் அமராவதி மருத்துவமனைக்கு பின்புறம் உள்ள அமராவதி மருத்தவமனை நடத்தும் நர்சிங் கல்லூரியில் படித்தேன். நான் படித்த கல்லூரியின் பெயர் அமராவதி நர்சிங். கல்லூரியின் தாளாளர் யார் என்று எனக்கு மறந்துவிட்டது. நீங்கள் கல்லூரியில் படித்த காலகட்டத்தில் முதல்வர் பெயர் எனக்கு தெரியாது பல வருடங்கள் ஆனதால் ஞாபகமில்லை.

நான் படித்தது நர்சிங் படிப்பு ஆகும். நர்சிங் கோர்சில் எந்த பிரிவு என்றால் எனக்கு தெரியாது. கல்லூரியில் முதலில் சேர்வதற்கு ரூ.2000/- பணம் செலுத்தினேன். அதன்பிறகு நான் பணம் செலுத்தவில்லை. நான் படித்தது 2020 ஆம் ஆண்டு ஆகும் லாக்டவுன் முடிந்து கல்லூரி ஆரம்பித்த நேரமாகும். நான் நர்சிங் 3 வருடம் படித்தேன். நான் நர்சிங் முழுமையாக படித்து முடிக்கவில்லை. என் மாமா கிருஷ்ணமூர்த்தி இறந்ததாலும் என் சகோதரி அ.சா.1 சஸ்மிதா மாதமாக இருந்ததால் நான் வீட்டில் இருந்து கவனிக்கவேண்டி இருந்தது. காலை 9.30 மணிக்கு கல்லூரி ஆரம்பித்துவிடும். மதியம் 12.30 லிருந்து 1.00 மணி நேரம் வரை மதிய உணவு நேரம் ஆகும். மீண்டும் 1.00 மணிக்கு ஆரம்பித்து மாலை 4.00 மணிக்கு கல்லூரி விடுவார்கள். காவல்துறையினரிடம் நான் அடையாள அட்டையை கொடுக்கவில்லை. கல்லூரிக்கு செலுத்திய ரசீதை காவல்துறையினர் வாங்கினார்களா என்றால இல்லை. நீங்கள் குற்றவியல் நீதிமன்றத்தில் வாக்குமூலம் அளித்த போது கல்லூரியில் படித்தேன் என்று வாக்குமூலம் அளித்துள்ளீர்கள் என்றால் சரிதான். காவல்துறையினர் உங்களை விசாரித்த போது 5 ஆம் எதிரியை எத்தனை ஆண்டுகளாக தெரியும் என்று கேட்டார்களா என்றால் எனக்கு ஏற்கனவே தெரிந்த நபர் என்று தான் காவல்துறையினர் விசாரணையில் கூறியுள்ளேன். சம்பவ இடத்தில் 5 ஆம் எதிரியை நீங்கள் பார்த்த விவரத்தை அ.சா.1 சஸ்மிதாவிடம் கூறினீர்களா என்றால் கூறினேன். நீங்கள் அந்த கல்லூரியில் படிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. சம்பவ சமயம் கொரானா காலம் என்பதால் அந்த சமயத்தில் எந்த வகுப்பும் நேரயடிாக நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல அந்த சமயத்தில் கொரானா முடிந்துவிட்டது. அந்த கல்லூரி ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் எந்த கல்லூரியும் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் நேரடி

வகுப்பு நடக்காததால் நீங்கள் கல்லூரிக்க செல்ல வேண்டிய வாய்ப்பு இல்லை என்று சொன்னா ல் சரியல்ல. உங்களுக்கு 5 ஆம் எதிரி ரமேஷை யார் என்று தெரியாது என்றும் காவல்துறையினர் சொல்லிக்கொடுத்து அடையாளம் சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல அவரை எனக்கு தெரியும். சம்பவ சமயத்தில் 5 ஆம் எதிரி எதிர் கட்சியின் உறுப்பினராக இருந்து தீவிரமாக அரசியலில் ஈடுபட்டு இருந்தார் என்றும் அதன் காழ்ப்புணர்ச்சி காரணமாக வழக்கில் சேர்க்க வேண்டும் என்று உங்களை சாட்சியாக செட்டப் செய்து காவல்துறையினர் சொல்லிக்கொடுத்ததற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல நான் உண்மைத்ததான் சொல்கிறேன்.

**ஒம்/.K.H.இளவழகன்.,**
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.